**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 312/2019**

Prosecution witness: 2

| | |
|---|---|
| Name: சதீஸ் | Caste: |
| Father'sName: | Calling: |
| Village: | Religion: |
| Taluk: | Age: |

Accused absent. Petition us filed

**Solemnly affirmed in accordance with the provision of Act X of** 1873 **on the day of** 24.01.2025

**முதல் விசாரணை**:

நான் தற்போது நீலகிரி மாவட்டம் குன்னூர் நகர் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 15.05.2019ம் தேதி காலை 8.00 மணிக்கு தேனி போதைப்பொருள் நுண்ணறிவுப்பிரிவு காவல்நிலைய பொறுப்பு அதிகாரியாக பணியில் இருந்தபோது ரகசிய தகவலாளி நேரில் ஆஜராகி கூறிய தகவலை 8.10 மணிக்கு பொதுநாட்குறிப்பில் பதிவு செய்து 8.15 மணிக்கு காவல்நிலைய ஆய்வாளர் திரு.ராஜேஸ்கண்ணா அவர்களுக்கு தகவல் தெரிவித்து அனுமதி பெற்றேன். பின்னர் காவல்நிலையத்தில் உடன் இருந்த தலைமைக்காவலர்கள் -லாரன்ஸ், பாஸ்கர் முதல்நிலைப் பெண்காவலர்-திருமதி.ஐயம்மாள் மற்றும் தகவலாளியுடன் உரிய உபகரணங்களை எடுத்துக்கொண்டு 8.25 மணிக்கு நிலையத்திலிருந்து கிளம்பி தேனி பழைய ரயில்நிலையம் அருகில் போதைப்பொருள் சம்பந்தமாக கண்காணித்துக்கொண்டிருந்தபோது சுமார் 9.45 மணிக்கு தகலாளி அடையாளம் காட்டி மறைந்து கொண்டார். அங்கு வெள்ளை நிற உரச்சாக்குப்பையுடன் வந்த ஒரு ஆண்நபரும், ஒரு பெண்ணும் எங்களது போலீஸ் பார்ட்டி அவர்களை அழைத்து விசாரித்தபோது ஆண் நபர் தேனி மாவட்டம், கீழக்கூடலுூர், வார்டுஎண்.9,

மாமுண்டிதேவர் சந்து என்ற முகவரியை சேர்ந்த ராஜேந்திரன் மகன் சிவனேசன் என்பதும், உடன் இருந்த பெண் அவரது தாயார் திருமதி.புஷ்பம் என்பதும் தெரியவந்தது. ரகசிய தகவலாளி கூறியதும், இவர்கள் கூறிய முகவரியும் ஒன்றாக இருக்கவே அவர்களிடம் விபரம் கூறி தங்களை சோதனை செய்ய அருகில் உள்ள நீதித்துறை நடுவரிடமோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடமோ அழைத்து செல்ல தங்களுக்கு உரிமை உள்ளது என்று எடுத்துக்கூறப்பட்டது. ஆனால் அவர்கள் அதற்கு விருப்பமில்லை என்றும் காவலர்களாகிய தாங்களே சோதனை செய்யலாம் என்றும் கூறினார்கள். அந்த இடத்திலேயே 9.50 மணி முதல் 10.30 மணி வரை சோதனை சம்மதக்கடிதம் தயார் செய்யப்பட்டது. அங்கு தனி நபர் சாட்சிகள் யாரும் முன் வராத காரணத்தினால் காவலர்கள் லாரன்ஸ் மற்றும் ஐயம்மாள் ஆகியோரை சாட்சிகளாக வைத்து அவர்களிடமும், எதிரிகளிடமும் கையொப்பம் பெறப்பட்டது. பின்னர் எதிரி சிவனேசன் கையில் வைத்திருந்த வெள்ளை நிற உரச்சாக்குப்பையை சோதனை செய்ய அதில் 1கிலோ 500கிராம் எடையுள்ள கஞ்சா இருந்தது. பகுப்பாய்வு மற்றும் மாதிரிக்காக சுமார் 25கிராம் எடையுள்ள இரண்டு மாதிரிகளை காக்கிகவரில் வைத்து எடுத்து அதற்கு S1 மற்றும் S2 என குறியீடு செய்யப்பட்டது. வழக்கு விபர சிலிப் ஒட்டி வெள்ளை நிற நூலால் சுற்றிக்கட்டி NIB சீல் வைக்கப்பட்டது. அதில் சாட்சிகள் மற்றும் எதிரிகளிடம் கையொப்பம் பெற்று அதில் நானும் கையொப்பம் செய்தேன். மீதம் உள்ள 1கிலோ 450கிராம் எடையுள்ள கஞ்சாவை அதே உரச்சாக்குப்பையில் வைத்து வெள்ளை நிற நூலால் கட்டி அதற்கு P1 என குறியீடு கொடுக்கப்பட்டது. மேற்படி எதிரிகளிடம் கஞ்சா பற்றி விசாரித்தபோது எதிரி சிவனேசன் என்பவர் எந்தவித அச்சறுத்தலும், ஆசைவார்த்தைகளும் இன்றி 10.30 மணி முதல் 11.10 வரை ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அதில் எதிரி மற்றும் சாட்சிகளிம் கையொப்பம் பெறப்பட்டது. எதிரிகளிடம் காரணம் கூறி உயர்நீதிமன்ற அறிவுறுத்தலின் அடிப்படையில் 11.20 மணிக்கு கைது செய்து கைதிகள் மற்றும் சொத்துக்களுடன் 12.00 மணிக்கு நிலையம் ஆஜராகி தேனி மாவட்ட போதைப்பொருள் நுண்ணறிவுப்பிரிவு குற்ற எண்.67/2019, ச/பி.8(c) r/w 20(b)(ii)(B)NDPS ACT ன் படி வழக்கு பதிவு செய்தேன். நகல்கள் உரிய உயர் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டது. பிரிவு 57ன்படி விரிவான அறிக்கையை

ஆய்வாளருக்கு அளித்தேன். கைப்பற்றிய பொருட்களை படிவம்-91 தயார் செய்தும், வழக்கின் மேல் விசாரணைக்கு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். ரகசிய தகவல் அ.சா.ஆ.6 ஆகும். ( எதிரி தரப்பு வழக்கறிஞர் ரகசிய தகவலை பொதுநாட்குறிப்பில் பதிவு செய்ததாகவும், தனி அறிக்கையாக பதிவு செய்ததாக கூறவில்லை என்றும் ரகசியதகவலை குறியீடு செய்யப்பட்ட ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்பட்டது). முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆகும். படிவம்-91 அ.சா.ஆ. 8 ஆகும். பிரிவு -57ன் படியான விரிவான அறிக்கை அ.சா.ஆ. 9 ஆகும். S1 என குறியீடு செய்யப்பட்டு பகுப்பாய்வுக்கு சென்று திரும்பிய கஞ்சா பொட்டலம் சா.பொ.1 ஆகும். S2 என குறியீடு செய்யப்பட்ட நிலையான மாதிரி கஞ்சாபொட்டலம் சா.பொ.2 ஆகும். P1 என குறியீடு செய்யப்பட்ட வெள்ளை நிற சாக்குப்பையில் உள்ள மீதம் உள்ள கஞ்சா சா.பொ.3 ஆகும்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் பதிவு செய்ததாக செல்லப்படும் முதல் தகவல் அறிக்கை, விரிவான அறிக்கை மற்றும் ஆய்வாளரின் விசாரணை வாக்குமூலம் ஆகியவற்றில் வழக்கின் தகவலை தனி அறிக்கையாக பதிவு செய்ததாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயங்களில் பெண் காவலர்கள் யாரும் பணிஅமர்த்தப்படவில்லை என்றால் சரிதான். சந்தேகப்படும் நபர்கள் பெண் நபர்கள் என்று தெரிந்தால் ஆய்வாளர் மூலமாக மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு தொடர்பு கொண்டு பெண் காவலர்களை எங்களது காவல்நிலையத்திற்கு வரவைப்பார்கள் என்று சொன்னால் சரிதான். அன்றைய தினம் ஆய்வாளர் காவல்நிலையத்தில் இல்லை என்றால் சரிதான். முதல்நிலைக்காவலர் -ஐயம்மாள் அவர்களை எத்தனை மணிக்கு யாருடைய தகவலின் பேரில் எங்களுடன் சேர்ந்துகொண்டார் என்றால் அந்த விபரம் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. வழக்கமாக பெண்காவலர் எங்களுக்கு வழங்கப்படாததால் ஆய்வாளர் வேண்டுகோள் படி ஆயுதப்படையிலிருந்து பெண்காவலர்கள் வரவழைக்கப்படுவார்கள். ஆயுதப்படையிலிருந்தோ, வேறு இடங் களிலிருந்தோ பெண்காவலர்கள் எங்கள் காவல்நிலையத்திற்கு அயல்பணியாக வரும்போது ஒரு கடவுசீட்டு கொண்டுவந்து ஒப்படைத்து பணியில் சேர்வார்கள் என்றால் சரிதான். முதல் நிலைக்காவலர்-ஐயம்மாள் அவர்களின் கடவுச்சீட்டு எதுவும் ஆய்வாளர்

விசாரணையின் போது கொடுத்தேனா என்று தற்போது நினைவில் இல்லை. மேற்படி பெண்காவலர் எத்தனைமணிக்கு எங்கு வந்து எங்களுடன் சேர்ந்தார்கள் என்றால் காலை 8.00 மணிக்கு காவல்நிலையத்தில் இருந்தார்கள். உண்மையிலேயே பெண்காவலர் காவல்நிலையத்திற்கு வழக்கிற்காக வந்தாரா என்று அவரை சாட்சியாக நீதிமன்றத்தில் விசாரித்தால் தான் தெரியவரும் என்றால் சரிதான். கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மாதிரி பொட்டலங்களின் மீது நானும் சாட்சிகள் மற்றும் எதிரிகளும் கையொப்பம் இட்டார்களா என்றால் கையொப்பமிட்டோம். சான்றுப்பொருள்-1ல் 2ம் எதிரியின் கையொப்பமோ, கைரேகையோ இல்லை என்றால் சரிதான். அவர் பெயர் விபரமும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சான்றுப்பொருள் இரண்டு மற்றும் மூன்று ஆகியவற்றில் விபரங்கள் அடங்கிய சிலிப் எதுவும் எழுதி ஒட்டப்படவில்லை அந்த பொட்டலத்தின் மீது சாட்சிகள் மற்றும் எதிரிகளின் பெயர் மற்றும் கையொப்பம் காணப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் கண்காணிப்பு முடிந்து காவல்நிலையம் வந்து வழக்கு பதிவு செய்தபின்னர் தான் குற்ற எண் இந்த வழக்கில் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். சா.பொ.1 மற்றும் 3 இவைகளில் காவல்நிலைய குற்ற எண் மற்றும் சட்டப்பிரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சான்றுப்பொருள் -1ல் உள்ள கையொப்பம் எதிரி-சிவனேசனின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. சான்றுப்பொருள்-1ல் சார்பு ஆய்வாளர் பதவிநிலை, முத்திரை பதிக்கப்பட்டு கையொப்பம் இடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் தயார் செய்ததாக சொல்லப்படும் ஆவணங்களில் சார்பு ஆய்வாளர் பதவி நிலை முத்திரை பதிக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கின் விரிவான அறிக்கையை பெற்றுக்கொண்டதற்கான ஆய்வாளரின் கையொப்பம் எதுவும் விரிவான அறிக்கையில் இல்லை என்றால் சரிதான். தேனி இரயில் நிலைய ரோடானது தேனி-பெரியகுளம் செல்லும் ரோட்டிலிருந்து தனியாக பிரிந்து செல்லும் ரோடு என்றால் சரிதான். அந்த ரோட்டில் இரயில்வே நிலையத்திற்கு செல்லும் வழியிலேயே தேனி, கிராம நிர்வாக அலுவலகம் மற்றும் தேனி சட்டமன்ற அலுவலகமும் உள்ளது என்றால் தெரியவில்லை. அந்த தெருவில் இரயிவே நிலையம் வரை வரிசையாக வீடுகள் உள்ளது என்றால் ஞாபகம் இல்லை. நான் உண்மையிலேயே சம்பவ இடம் பக்கமாக கண்காணிக்க செல்லவில்லை

என்பதால் தான் சம்பவ இடம் பற்றி தெரியவில்லை என்றால் சரியல்ல. சோதனை சம்மத கடிதம் பெற்ற பின்பு இரண்டு எதிரிகளையும் யார் தனிப்பட்ட முறையில் சோதனை செய்தது என்றால் பெண்ணதிரியை பெண்காவலர் சோதனை செய்தார். சிவனேசன் என்பவரை எந்த காவலர் சோதனை செய்தார் என்று ஞாபகம் இல்லை. சிவனேசன் என்ற எதிரியை ஆண் காவலர்கள் வைத்து சோதனை செய்தோமா என்றால் அவர் உடலை சோதனை செய்யவேண்டிய அவசியம் இல்லை என்பதால் நாங்கள் சோதனை செய்யவில்லை. சம்பவ இடத்தில் தயார் செய்ததாக சொல்லப்படும் ஆவணங்களை யார் எழுதி தயார் செய்தது என்றால் நானும் உடன் வந்த காவலர்களும் தயார் செய்தோம். உடன் வந்த காவலர்கள் யார் யார் எதை, எதை தயாரித்தார்கள் என்று சொல்ல இயலவில்லை. நான் தயார் செய்த ஆவணம் ஒப்புதல் வாக்குமூலம் ஆகும். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் தனியாக எதுவும் பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். போதைப்பொருள் சட்டப்பிரிவு 50(1) ன் படி எதிரிகளை தனிப்பட்ட முறையில் உடலை தொட்டு சோதனை செய்வதற்குத்தான் சோதனை உரிமை அறிவிப்பு வழங்கப்படவேண்டும், மற்ற நேரங்களில் வழங்கப்படவேண்டியதில்லை என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். சோதனை சம்மத கடிதம் எத்தனைமணிக்கு தயார் செய்யப்பட்டுள்ளது என்று அந்த ஆவணத்தில் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. நான் தயார் செய்ததாக சொல்லப்படும் சோதனை சம்மத கடிதத்தில் புஷ்பம் என்ற எதிரிக்கு சோதனை உரிமை அறிவிப்பு கொடுத்தாகவே சொல்லப்படவில்லை என்றும் சிவனேசன் என்ற எதிரிக்கு அவர் கையில் வைத்திருந்ததாக சொல்லப்படும் பையை சோதனை செய்வதற்காகத்தான் சோதனை உரிமை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அத்தாட்சியில் எத்தனை கிலோகிராம் எடையுள்ள மீதி கஞ்சா என்பதில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அத்தாட்சி ஆவணத்தில் யாரிடம் இருந்து பொருட்கள் கைப்பற்றப்பட்டது என்ற இடத்தில் சிவனேசன் என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது புஷ்பம் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் தயார் செய்ததாக சொல்லப்படும் ஆய்வு நமூனா, கைதுக்கான காரணத்தை தெரிவிக்கும் நமூனா ஆகியவை இரண்டும் ஒரே நேரத்தில், ஒரே கையெழுத்துடைய ஒரே நபர் மூலம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் ஒரே நேரத்தில்

என்றால் சரியல்ல. ஒரே நபருடைய கையெழுத்து என்றால் சரிதான். கைது செய்வதற்கான காரணத்தை தெரிவிக்கும் நமூனா எத்தனை மணிக்கு தயார் செய்யப்பட்டதாக கூறப்பட்டுள்ளது என்றால் 11.20 மணிக்கு கைது செய்வதாக இதன் மூலம் தெரிவிக்கிறேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எத்தனைமணிக்கு தயார் செய்யப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை. ஆய்வு நமூனா காலை11.20 மணிக்கு தயார் செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் ஆவணங்களை பார்த்து வேண்டுமென்றே தவறுதலாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சொத்துக்களை ஆய்வாளரிடம் நான் பட்டியலிட்டு சமர்ப்பித்து ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சொத்துக்களை எந்தவகையான தராசில் எடைபோட்டோம் என்றால் எலக்ட்ரானிக் தராசில் எடைபோட்டோம். நான் தயார் செய்ததாக சொல்லப்படும் படிவம்-91ல் 15.05.2019ம் தேதியன்று வழக்கு சொத்துடன் சேர்த்து தாக்கல் செய்யும்படி தேனி நீதித்துறை நடுவர் மேற்குறிப்பு செய்துள்ளார் என்றால் சரிதான். நான் உண்மையில் முதல் விசாரணையில் சொன்னதுபோல் எனக்கு தகவல் எதுவும் வரவில்லை என்றாலும் அதன் பேரில் நாங்கள் கண்காணிப்புக்கு செல்லவில்லை என்றாலும் இந்த எதிரிகளை சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் பார்க்கவில்லை என்றாலும் அவர்களுக்கு உரிமை அறிவிப்பு எதுவும் வழங்கவில்லை என்றாலும் அவர்களிடமிருந்து போதைப்பொருள்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அந்த ஆவணங்களில் உயர் அதிகாரியின் வேண்டுகோளுக்கிணங்க கையொப்பம் இட்டு அதை அனுசரித்து உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளை சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் கூடலூர் கிராமத்தை சேர்ந்தவர் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எதிரிகளுக்கும் அவர்கள் அருகில் வசிக்கும் நபருக்கும் ஏற்பட்ட பொதுசுவர் பிரச்சனை காரணமாக எதிரிகளின் பக்கத்து வீட்டுக்காரருக்கு உதவி செய்யும் எண்ணத்துடன் இந்த எதிரிகளை வீட்டிலிருந்து

விசாரணைக்கு என்று அழைத்துவந்து பொய்யான வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும் இந்த வழக்கு ஆவணங்களில் எதிரிகளை காவல் நிலையத்தில் வைத்து மிரட்டி, அச்சுறுத்தி கைரேகை மற்றும் கையெழுத்து பெறப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கு பதிவு செய்யப்பட்ட பின்னர் 2ம் எதிரியின் சகோதரர் காமாட்சி என்பவர் இந்த வழக்கு பொய்யானது என்று தங்கள் துறை உயர்அதிகாரிகளுக்கும், மாவட்டநீதிமன்றத்திற்கும், உத்தமபாளையம், நடுவர் நீதிமன்றத்திற்கும் புகார் அனுப்பியிருந்தார் என்றும் அதன் பேரில் தங்களது ஆய்வளரின் மீது விசாரணை நடைபெற்றது தங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கின் சொத்துக்களுக்கும், இந்த எதிரிகளுக்கும் எந்த விதத்திலும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் போதைப்பொருள் விதிகளை முறையாக பின்பற்ற வில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை ; இல்லை.